6 அக்டோபர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 27 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் ஆயர் மாமன்றத்தை நோக்கிப் பகிரப்பட்டப் பணி

# மனிதன் அல்ல; கடவுளே, திருமணத்தின் ஆசிரியர்

இன்றைய காலத்தில் குடும்பம் மற்றும் திருமணம் என்னும் அமைப்பு எதிர்கொள்ளும் பலசவால்களை நம்மில் பலர் அறிந்திருக்கிறோம். கத்தோலிக்கத் திருஅவையால் புரிந்துகொள்ளப்பட்ட மற்றும் கற்பிக்கப்பட்ட திருமணம் “இன்று நடைமுறைக்கு ஒத்துவராது” என்றும் சமகால கோரிக்கைளுக்கு ஏற்ப மறுபரிசீலனை செய்யபட்டு திருத்தப்படவேண்டுமென்றும் சிலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம்.



இருப்பினும், கடவுள் தாமே திருமணத்தை உருவாக்கினார் என்று இன்றைய திருப்பலி வாசகங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன.

தாம் உருவாக்கிய மனிதன் தனிமையில் இருப்பதைக் கவனித்த இறைவன், அவனுக்கு ‘தகுந்த துணையை’ உருவாக்குவேன் என்று முடிவு செய்தார் என்பதை இன்றைய முதல் வாசகம் விவரிக்கிறது. எனவே கடவுள் ஆணின் விலா எலும்பில் இருந்து ஒரு பெண்னை உருவாக்குகிறார். பெண்ணை ஆணிடம் கடவுள் அழைத்துவரும்போது, அவன் “தகுந்த துணை” தனக்கு கிடைத்துவிட்டதென்று மகிழ்ச்சியில் அக்களிக்கின்றான். இப்போது அவன் தனிமையாய் இல்லை.

ஆணின் விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கியதன் மூலம், ஆண் பெண்ணுடன் பகிர்ந்துகொள்ளும் அனைத்திலும் சமமான தன்மையையும், அவர்களின் ஒன்றிணைக்கும் பிணைப்பையும் கடவுள் வலியுறுத்துகிறார். ஆணும் பெண்ணும் ஒரு உடன்படிக்கையின் உறவில் பங்குகொள்ளவும், திருமணம் என்னும் பந்தத்தில் ஈர்க்கப்பட்டு கணவன் மனைவியாக தாம்பத்திய உறவில் ஈடுபடுவதும் அடங்கும்.

பரிசேயர்கள் திருமணம் மற்றும் திருமண விலக்கு பற்றிய கேள்வியுடன் இயேசுவை அணுகும்போது, அவர்களை உடனடியாக அவர் திருத்துகிறார். மற்ற தலைவர்கள் சில சூழ்நிலைகளில் கணவன் தன் மனைவியை மணவிலக்கு செய்ய அனுமதித்தாலும், “கடவுள் இணைத்ததை, மனிதன் பிரிக்கக்கூடாது” என்று இயேசு கற்பித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், ஒரு ஆண் தனது மனைவியை மணவிலக்கு செய்ய அனுமதி இல்லை. இயேசு கூறிய செய்தியின் மையம், வாழ்க்கைத் துணைவர்கள் மரணம் வரை உண்மையுள்ள மற்றும் நிரந்தரமான ஒன்றிப்போடு வாழ்வதற்கான சவால்.

இந்த வழியில், கடவுள் விரும்பியபடி, திருமணத்தை அதன் மூலவடிவத்திற்கு மீட்டெடுக்க இயேசு முயற்சிக்கிறார். ஆணையும் பெண்ணையும் உருவாக்குவதன் மூலம், ‘தொடக்கத்தில் இருந்தே’ கடவுள் ஆணையும் பெண்ணையும் பிரிக்கமுடியாத ஒரு பந்தத்தில் இணைக்கவேண்டுமென்று எண்ணினார். கணவனும் மனைவியும் “இருவராயிருந்தாலும், ஒரே உடலாயிருப்பர்” என்பது கடவுளால் நிறுவப்பட்ட உடன்படிக்கையின் உறவைக் குறிக்கிறது.

கத்தோலிக்கத் திருஅவையில் திருமணம் என்பது பிரிக்கமுடியாதது. ஏனென்றால் திருமணத்தின் புனிதத்தில் ஒரு ஆணையும் பெண்ணையும் ஒன்றாகக் கொண்டுவருவது கடவுள் தான். கடவுள் தான் திருமணத்தின் ஆசிரியர். திருஅவை உட்பட எந்த ஒரு மனித நிறுவனமோ அல்லது எந்த ஒரு மனித முயற்சியோ அது எந்த வடிவத்தில் இருந்தாலும், “கடவுள் இணைத்ததை, எந்த மனிதனும் பிரிக்கக்கூடாது” இது மாற்றமுடியாதது.

**ஆயர் மாமன்றத்தின் பயணம் என்பது மூன்றாம் நூற்றாண்டில் கடவுள் விரும்பும் திருஅவையின் பயணம்.**

*- திருத்தந்தை பிரான்சிஸ்*




### இன்றைய இறைவார்த்தை:

தொடக்கநூல்: 2: 18-24

திபா: 128: 1-6

எபிரேயர்: 2: 9-11

மாற்கு 10: 2-16 (அ) 10: 2-12

INTERNAL CIRCULATION ONLY
BUL 40/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org